## பாலியல் சுரண்டலுக்குள்ளான சிறுவர்களின் நிலை

பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் சுரண்டலுக்கும் உள்ளான சிறுவர் சிறுமியர் உடல் உள ரீதியான அதிர்ச்சிக்கு உள்ளாகுவதுடன், பாலியல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் உள்ளாகும் சாத்தியம் உண்டு. மேலும், அவர்களது எதிர் காலம் பாழடைந்து, பொன்னான சிறுவர் பராயத்தை இழந்துவிடுவர்.

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் நடப்பதாக அறிந்தால்

உடனடியாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு

**1929**

என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அறிவியுங்கள்

அல்லது

எமது பீஸ் (PEaCE) அமைப்புடன் பின்வரும் இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளுங்கள்

**+94 11 281 9397 / +94 70 550 7121**

அல்லது

மின்னஞ்சல்: **report@ecpatsrilanka.org** என்ற முகவரிக்கு அனுப்புங்கள்


எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு

(PEaCE / ECPAT Sri Lanka)

இல. 165/2 துட்டுகெமுனு வீதி, கொஹுவல.

தொ.பே: 011 281 9397 கை.தொ.பே: 070 550 7121

தொலைநகல்: 011 276 8862

மின்னஞ்சல்: report@ecpatsrilanka.org

வலைத்தளம்: www.ecpatsrilanka.org

முகநூல்: ECPAT Sri Lanka டுவிட்டர்: ECPAT Sri Lanka



இது சுற்றுலாத்துறையை பிரதிபலிக்கும் பீஸ் அமைப்பின் வெளியீடு


# சிறுவர்களை பாதுகாப்போம்

## சுற்றுலாத்துறையை ஊக்குவிப்போம்



## காலத்தின் தேவை சிறுவர்களைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள சுற்றுலாத்துறை!


எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு

(PEaCE / ECPAT Sri Lanka)

## சுற்றுலாத்துறை ஏன்?

எமது நாட்டின் வெளிநாட்டு வருமானத்தை பெற்று தருவதில் சுற்றுலாத்துறை மூன்றாம் இடம் வகிக்கிறது. இலட்சக்கணக்கானவர்கள் சுற்றுலாத் துறையினூடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மை அடைகின்றனர். ஆகையால், சுற்றுலாத் துறை எமது தேசிய வருமானத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது.

## சுற்றுலாத்துறையின் தற்போதைய நிலைமை

சுற்றுலா பயணிகள் ஹோட்டல்கள், உல்லாச விடுதிகள், ஓய்வு விடுதிகள் மற்றும் வீடுகளில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இவற்றுள் சில பதிவு செய்யப்பட்டவை, சில பதிவு செய்யப்படாதவை.

இயற்கை வளங்கள், எழில்மிகு கடற்கரைகள், வரலாறு மற்றும் கலாச்சாரம் மிகுந்த பிரதேசங்கள், பசுமையான காட்சிகள், பரவசமூட்டும் அனுபவங்கள், மிதமான காலநிலை மற்றும் வளர்ந்து வரும் வர்த்தகம் போன்றவற்றால் எமது நாடு ஏராளமானவர்களுக்கு உல்லாசம் தரும் ஒரு இடமாகிவிட்டது. இவை அனைத்தும் இருந்தாலும் இந்த சொர்க்க பூமிக்கு ஓர் இருண்ட பக்கமும் உண்டு.

சில சந்தர்ப்பவாத விஷமிகள் போதை பொருள் கடத்தல், ஆட்கடத்தல், சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தல், ஆபாச படங்கள் எடுத்தல், சூதாட்டம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு சுற்றுலாத்துறையை பயன்படுத்துகின்றனர்.

## சுற்றுலாப்பயணிகளும் துஷ்பிரயோகமும்

சுற்றுலாப்பயணிகள் மூலம் எமது வருமான நிலை அதிகரித்தாலும்கூட, சில சுயநலவாதிகள் இங்கு வரும் வெளிநாட்டவரின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களை சட்டவிரோத செயல்களில் ஈடுபட வைக்கின்றனர்

### சுற்றுலாப்பயணிகளும் சிறுவர் பாலியல் சுரண்டலும்

எமது நாட்டில் விபச்சாரம் சட்ட விரோதச் செயல். 18 வயதிற்கு குறைந்தவர்களை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துவதும் சிறுவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதும் நம் நாட்டு சட்டத்தின் முன் தண்டனைக்குரிய குற்றங்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியவை

ஒரு சிறுவன், அல்லது சிறுமியோடு, உறவு கொள்ள உங்களை யாராவது நாடினாலோ அல்லது வேறு ஒருவரை நாடுவதை நீங்கள் அறிந்தாலோ, தயவுசெய்து அவர்களிடம் இந்த செயல் சட்ட விரோதமானதென்றும் தண்டனைக்குரிய குற்றம் என்றும் கூறுங்கள்.

முடியுமானால், அவர்களின் பெயர், அடையாளம் மற்றும் தொடர்பு விபரங்களை குறித்துக் கொண்டு உரிய அதிகாரிகளுக்கு அறிவியுங்கள்.

சிறுவர்கள் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்கள். ஆகவே, உங்களின் உதவி அவர்களுக்கு தேவை.

பெற்றோர்களே! அன்புக்குரியவர்களே!
உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள்!!!

**உடனடியாக நீங்கள் செயற்பட்டால் ஒரு சிறுவன் அல்லது சிறுமியின் வாழ்வை காப்பாற்றலாம்!**